Register No. | | | | | | | | |

THE CENTRAL LAW COLLEGE, SALEM-636 008. LIBRARY

**FRF** **4419–19**

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

# B.A.B.L./B.A.LL.B DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

## CONSTITUTIONAL LAW – II

Time : Three hours Maximum : 100 marks

### PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain how does the President exercise the power of pardon.

மன்னிக்கும் அதிகாரத்தை குடியரசு தலைவர் பயன்படுத்தும் முறை குறித்து விளக்குக.

Scanned with CamScanner

2. Discuss the situations where the disciplinary authority has to decide ex parte and without giving a hearing to the concerned civil servant.

எந்தச் சூழல்களில் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி அரசு பணியரது வழக்கினைக் கேளாது ஒருதலைப்பட்சமாக முடிவெடுக்கலாம் என்பதை விவாதிக்க.

3. How does the Parliament get its power to legislate on state subjects?

மாநில பட்டியலில் உள்ள பொருள் குறித்து நாடாளுமன்றம் சட்டம் இயற்ற எவ்வாறு அதிகாரம் பெற்றுள்ளது.

4. "Trade, commerce and intercourse throughout the territory of India shall be free" – Discuss.

"இந்திய எல்லை எங்கிலும் வணிகம், வர்த்தகம் மற்றும் இடைத் தொடர்பு சுதந்திரமாக இருக்கும்" – விவாதிக்கவும்.

5. Explain the various methods of amendment of the Constitution and critically examine the role of state legislatures in constitutional amendments.

அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான பல்வேறு முறைகளை விளக்கி அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதில் மாநில சட்டமன்றங்கள் வகிக்கும் பங்கினை திறனாய்வு செய்க.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக :

(a) Effects of proclamation of National emergency.

தேசிய நெருக்கடி நிலை பிரகடனத்தின் விளைவுகள்

(b) Passing of bills in the Parliament

நாடாளுமன்றத்தில் சட்டமுன்வடிவங்களை நிறைவேற்றுதல்.

(c) Speaker of Legislative assembly.

சட்டப் பேரவைத் தலைவர்

(d) Appellate Jurisdiction of Supreme Court

உச்சநீதிமன்ற மேல்முறையீட்டு ஆள்வரை

(e) Functions of the Public Service Commission

அரசு பணியாளர் தேர்வு ஆணையத்தின் பணிகள்

(f) Doctrine of Colourable legislation

பொய்மைத் தோற்றக் கோட்பாடு

(g) Inter-state Council

மாநிலங்களிடை மன்றம்



Scanned with CamScanner

(h) Doctrine of immunity of instrumentality

அரசின் துணை அதிகார அமைப்புகளின் சட்ட விலக்களிப்பு கோட்பாடு

(i) Parliament's power to regulate trade and commerce.

தொழில் மற்றும் வணிக ஒழுங்குறுத்தும் நாடாளுமன்ற ஆற்றல்

(j) Amendment of Fundamental rights

அடிப்படை உரிமைகளை திருத்துதல்

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The factories in the industrial areas are polluting the atmosphere thereby affecting the air quality of a State. The same is spreading to adjacent States also. The Government of India had promised to the international for a to take suitable measures to check its air pollution. Advise the Central Government as to how to legislate in matters relating to the state.

ஒரு மாநிலத்தின் தொழிற்பேட்டையில் உள்ள ஆக்கத் தொழிலகங்கள் வளி மண்டல மாசுக்கேட்டை ஏற்படுத்தி காற்றின் தரத்தை பாதிப்புக்குள்ளாக்குகின்றன. அப்பாதிப்பு அண்டை மாநிலங்களுக்கும் பரவுகின்றது. இந்திய அரசு வளிமண்டலத்தில் மாசு கலப்பதை கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுப்பதாக சர்வதேச அமைப்புகளுக்கு வாக்குறுதி அளித்துள்ளது. மாநில பட்டியலில் உள்ள பொருள் குறித்து சட்டம் இயற்ற நடுவண் அரசிற்கு ஆலோசனை வழங்குக.

8. The executive of the State Government entered into a contract with suppliers for supply of materials for the construction of houses for the poor. Due to urgency, a lower division clerk signed the contract without the knowledge of his superiors. Can the suppliers claim the amount from the Government for the goods supplied?

ஏழைகளுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கட்டுமான பொருட்கள் வழங்குவோருடன் மாநில அரசின் நிர்வாகத்துறை ஒப்பந்தம் செய்கிறது. அவசரத்தை முன்னிட்டு உயர் அலுவலருக்குத் தெரியாமல் கீழமை எழுத்தர் அவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டார். வழங்கப்பட்ட பொருட்களுக்குரியத் தொகையினை வழங்குவோர் கோர இயலுமா?

9. 'A', an editor of a newspaper, was found guilty of committing contempt of the House and the State Legislature issued a warrant to arrest him. Can 'A' challenge the warrant? Decide.





Scanned with CamScanner

‘A’ ஒரு நாளிதழின் பதிப்பாசிரியர். அவர் சட்டசபை அவமதிப்புக் குற்றம் புரிந்ததற்காக அவரை கைது செய்யும்படி மாநில சட்டசபை பிடியாணை ஒன்றைப் பிறப்பிக்கிறது. ‘A’ அந்தப் பிடியாணையை மறுதலிக்க முடியுமா? தீர்மானிக்க.

10. A notification for Presidential election was challenged on the ground that two states were under Presidential rule – Decide.

இரண்டு மாநிலங்கள் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் இருக்கும் தருவாயில் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கினை முடிவு செய்க.

11. A military truck carrying jawans was going towards the training spot. On the way it met with an accident due to negligent driving and as a result a pedestrian died on the spot. The widow of the deceased man claimed compensation. Will she succeed?

இராணுவ வீரர்களை பயிற்சிக்காக ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் ஓட்டுநரின் கவனக் குறைவால் இராணுவ வண்டி விபத்துக்குள்ளாகிறது. அச்சம்பவத்தில் அவ்வழியாக நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர் அவ்விடத்திலேயே இறந்து விடுகிறார். இறந்தவரின் மனைவி இழப்பீடு கோருகிறார். அவர் வெற்றி பெறுவாரா?



12. “No Government servant shall participate in any demonstration or resort to any form of strike in connection with any matter pertaining to his conditions of service”. Decide the validity of this Government order – Examine.

“அரசு ஊழியர் எவரும் தங்கள் பணி பொருட்டு எந்தவித ஆர்பாட்டத்திலோ அல்லது வேலை நிறுத்தத்திலோ ஈடுபடுதல் கூடாது”. இந்த அரசாணையின் செல்லும் நிலையை ஆராய்க.

THE CENTRAL LAW COLLEGE
LIBRARY
SALEM-636 008.



Scanned with CamScanner

Register No. | | | | | | | | |

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM-636 008.

**FRF** **4201–19**

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

B.A.B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2019.

(Five year Regular Course)

Third Year – Sixth Semester

CONSTITUTIONAL LAW – II

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the Pardoning power of the President with relevant decisions of the Court.

ஜனாதிபதியின் மன்னிப்பளிக்கும் அதிகாரத்தினை முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு விளக்குக.

Scanned with CamScanner

2. Briefly examine the privileges of the Legislature.

சட்டம் இயற்றுபவர்களின் சிறப்புரிமைகளைப் பற்றி சுருக்கமாக ஆய்வு செய்க?

3. Discuss the legislative and administrative relations between the Centre and States.

மத்திய மாநிலங்களுக்கு இடையிலான சட்டமியற்றும் மற்றும் நிருவாக உறவினை விவாதிக்கவும்.

4. What is National Emergency and on what ground it may be declared and state its consequences?

தேசிய நெருக்கடி என்றால் என்ன மற்றும் எதன் அடிப்படையில் தேசிய பிரகடனம் செய்யலாம் என்பதனையும் அதன் விளைவுகளையும் குறிப்பிடுக.

5. Define Doctrine of Pleasure and what are the safeguards available to a Civil Servant under the Constitution.

விருப்பக் கோட்பாட்டினை வரையறை செய் மற்றும் என்ன விதமான பாதுகாப்புகள் ஒரு அரசு ஊழியருக்கு அரசமைப்பு சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளது?



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டினுக்கு குறுகிய விடைகள் தருக.

(a) Doctrine of pith and substance.

மையக் கருப்பொருள் கோட்பாடு.

(b) Finance Bill.

நிதிமசோதா.

(c) Independence of Judiciary.

நீதித்துறையின் சுதந்திரம்.

(d) Election Commission of India.

இந்திய தேர்தல் ஆணையம்.

(e) Parliament.

பாராளுமன்றம்.

(f) Doctrine of Checks and Balances.

கட்டுப்படுத்தல் மற்றும் சமச்சீர் கோட்பாடு.

(g) L. Chandra Kumar vs. Union of India.

எல். சந்திரகுமார் எதிர் இந்திய அரசு.



Scanned with CamScanner

(h) IX th schedule.

ஒன்பதாவது அட்டவணை.

(i) Centre state financial relations.

மத்திய மாநில நிதி உறவுகள்.

(j) Amendment of the Constitution.

அரசமைப்பை திருத்தம் செய்தல்.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The speaker of the Tamil Nadu Legislative assembly disqualified four M.L. A.s under the anti defection law. The disqualified MLAs approached the Madras High Court challenging the order of the speaker. The Madras High Court struck down the order of the speaker. The speaker appealed against the order of the Madras. High Court on the ground that under the anti defection law the order of the speaker is final–Decide.



கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத்தலைவர் நான்கு சட்டமன்ற உறுப்பினர்களை தகுதியிழப்பு செய்கிறார். இதனை எதிர்த்து அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். சென்னை உயர்நீதிமன்றம் சட்டமன்ற உறுப்பினர்களை தகுதியிழப்பு செய்து சட்டமன்ற பேரவைத்தலைவர் பிறப்பித்த உத்தரவு செல்லாது என அறிவித்தது. இதன் மீது மேல் முறையீடு செய்த சட்டப்பேரவைத் தலைவர் கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் சட்டப்பேரவைத் தலைவர் எடுக்கும் முடிவே இறுதியானது என வாதிடுகிறார். தீர்மானிக்கவும்.

8. The Governor of Bihar promulgated an ordinance in 2015 and extended it till 2018 without prior consent from the state legislature. Whether the Governor's act is sustainable. Advise.

மாநில சட்டமன்றத்தின் முன் சம்மதமின்றி 2015 ஆம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை ஓர் அவசர சட்டத்தை பீகார் மாநில ஆளுநர் கால நீட்டிப்பு செய்து வந்தார். ஆளுநரின் இச்செயல் நிலைக்கத்தக்கதா? அறிவுரைக்க.

9. Kanu Sanyal, a top ranking Naxalite leader, was arrested and detained without trial by the Andrapradesh police for investigation. His where abouts was not informed for months together. The wife of Kanu Sanyal approached the High Court for issuing writ of Habeas Corpus. Discuss.



Scanned with CamScanner

ஆந்திர மாநில போலிசார் கனு சன்யால் என்ற நக்சல் பாரி இயக்க முதன்மை தலைவரை கைது செய்து நீதிமன்ற விசாரணை இல்லாமல் தடுப்புக் காவலில் வைத்தனர். பல மாதங்களாக அவரின் தடுப்பு காவல் இருப்பிடம் எவருக்கும் தெரிவிக்கப்படவில்லை. இந்நிலையில் கனு சன்யாலுனுடைய மனைவி ஆட்கொணர்வு நீதிப்பேராணை வேண்டி உயர்நீதிமன்றத்தை அணுகினார். விவாதிக்க.

10. Anand, a sweeper working at Government Arts college in Chennai has remained absent for a month without any information. The College after enquiry dismissed him from service. Decide the merits of the case.

சென்னை அரசு கலைக்கல்லூரியில் துப்புரவாளராக பணிபுரியும் ஆனந்து என்பவர் எந்த வித அறிவிப்பும் இன்றி ஒரு மாதமாக வேலைக்கு வரவில்லை. கல்லூரியும் விசாரணக்கு பிறகு அவரை வேலையில் இருந்து நீக்கியது. வழக்கின் தகுதி குறித்து முடிவு செய்க.

11. During the National Emergency, the President of India suspended all the fundamental rights under Article 359. The Human Rights watch, an NGO questioned the validity of the President's order. Discuss.

தேசிய நெருக்கடி நிலையின் போது, குடியரசுத் தலைவர் சரத்து 359–ன் கீழ் அனைத்து அடிப்படை உரிமைகளையும் நிறுத்தி வைத்தார். மனித உரிமை விழிப்பு என்ற அரசு சாரா அமைப்பு ஜனாதிபதியினுடைய ஆணையின் செல்லும் தன்மை குறித்து வினவியது. விவாதிக்க.



12. 'A' a judge from Madras High Court retires on 24.3.2016. After retirement, he intended to practice as advocate in the Supreme Court and Karnataka High Court. Can 'A' practice as an Advocate in these courts.

'அ' என்ற நீதிபதி சென்னை உயர்நீதி மன்றத்தில் இருந்து 24–3–2016 அன்று ஓய்வு பெற்றார். ஓய்வுக்குப் பிறகு உச்ச நிதி மன்றத்திலும் , கர்நாடக உயர்நீதிமன்றத்திலும் வழக்குறைஞராக பணியாற்ற நினைக்கிறார். 'அ' என்பவர் வழக்கறிஞராக இந்த இரண்டு நீதிமன்றங்களில் பணியாற்ற முடியுமா?

———————



Scanned with CamScanner

Register No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

THE CENTRAL LAW COLLEGE LIBRARY

**FRF**

**3992–18**

(For the candidates admitted from 2009-2010 to 2015-2016)

B.A., B.L./B.A., LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018.

(Five Years Regular Course)

Third Year – Sixth Semester

CONSTITUTIONAL LAW – II

Time : Three hours                    Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Discuss the appointment of High Court judges with reference to decided cases.

   உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் குறித்து தீர்க்கப்பட்ட வழக்குகள் வாயிலாக விவாதிக்க.

Scanned with CamScanner

2. Explain the procedure for the Amendment of the constitution.

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான நடைமுறையை விவரிக்கவும்.

3. Examine the parliamentary privileges.

நாடாளுமன்றச் சிறப்புரிமைகளை ஆய்க.

4. What are the constitutional safeguards available for civil servants?

குடிமைப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டப் பாதுகாப்புகள் யாவை?

5. What are the pardoning powers of the President?

குடியரசுத் தலைவரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரங்கள் யாவை?

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக :

(a) Writ of Hebeas corpus

ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை



(b) Financial bill

நிதிச் சட்டமுன்வரைவு

(c) Colourable legislation

உருமறைச் சட்டம்

(d) Speaker of Lok Sabha

மக்களவைத் தலைவர்

LIBRARY SALEM

(e) The Vice-President of India

இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர்

(f) Financial emergency

நிதி நெருக்கடி நிலை

(g) Attorney General of India

இந்திய அரசுத் தலைமை வழக்கறிஞர்

(h) Appeal by special leave

தனிமுறை அனுமதி வழி மேல் முறையீடு

(i) Residuary powers

எஞ்சிய அதிகாரங்கள்

(j) Doctrine of pith and substance

சாரக் கருப்பொருள் கோட்பாடு



Scanned with CamScanner

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The speaker of a legislative assembly was openly threatening a sitting judge of the High Court in a public meeting. The speaker claimed immunity from liability for contempt of court. Can his claim be sustained in law?

பொதுக்கூட்டமொன்றில் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருப்பவரை சட்டப்பேரவை தலைவர் ஒருவர் வெளிப்படையாக மிரட்டிப் பேசினார். பேரவைத் தலைவர் நீதிமன்ற அவமதிப்புப் பொறுப்படைவிலிருந்து விலக்கு கோருகிறார். அவரது கோருரிமை நிலைபெறத்தக்கதா?

8. A State Government without taking into consideration the income produced from the land levied uniform land tax for all kinds of land. Whether such levy of tax is valid or not. Decide.

ஒரு மாநில அரசு நிலத்திலிருந்து வரும் வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் எல்லா வகையான நிலத்திற்கும் ஒரே அளவான வரி விதிப்பைச் செய்கிறது. இத்தகைய வரி விதிப்பு அரசமைப்பு சட்டத்தில் செல்லுபடியாகுமா? ஆகாதா? – தீர்மானிக்க.



9. No government servant shall participate in any demonstration or resort to any form of strike in connection with any matter pertaining to his conditions of service. Decide the validity of this Government order – Examine.

அரசு ஊழியர் எவரும் தங்கள் பணி பொருட்டு எந்தவித ஆர்பாட்டத்திலோ அல்லது வேலை நிறுத்தத்திலோ ஈடுபதல் கூடாது. இந்த அரசாணையின் செல்லும் நிலையை ஆராய்க.

10. A State legislature made a law restricting the use of sound amplifiers. The law was challenged on the ground that the matter falls under List I and, it was not within the legislative competence of the state legislature. Decide.

ஒரு மாநிலச் சட்டமன்றம் ஒலி பெருக்கியை பயன்படுத்தக் கட்டுப்பாடுகள் விதித்து சட்டம் இயற்றியது. இச்சட்டம் பட்டியல் I-ல் உள்ளடங்கும் என்பதாலும் மாநில சட்டமன்றத்தின் சட்டமியற்றும் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என்று வழக்கிடப்படுகிறது. தீர்வழி காண்க.

11. An ordinance was proclaimed by the President at a time when both houses of the parliament was not in session. This was strongly objected by the opposition parties. Discuss the validity of the ordinance.

நாடாளுமன்றத்தின் ஈரவைகளும் அமர்வில் இல்லா நேர்வில் குடியரசுத் தலைவரால் ஒரு அவசர சட்டம் விளம்புகைச் செய்யப்படுகிறது. இதனை எதிர்கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. அவசரச் சட்டத்தின் செல்லும் தன்மையை விவாதிக்க.



Scanned with CamScanner

12. 'A' contested in an election representing a political party and elected to the legislative assembly. Later he was expelled from the party. But he continued to be a member of the legislative assembly as unattached member. Later he joined another political party. Is he disqualified as per the tenth schedule of the Indian Constitution? Decide.

'அ' என்பவர் சட்டசபைத் தேர்தலில் ஒரு அரசியல் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர் அவர் அந்த கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். ஆனால் அவர் தொடர்ந்து சட்டசபையில் கட்சி சாரா தனி உறுப்பினராக இருந்து வந்தார். பின்னர் அவர் வேறு ஒரு கட்சியில் சேர்ந்தார். அவர் இந்திய அரசமைப்புச் சட்டம் பத்தாம் அட்டவணையின் அடிப்படையில் தகுதி இழந்தவரா? தீர்மானிக்க.

---

THE CENTRAL LAW COLLEGE
LIBRARY
SALEM-636 008.



Scanned with CamScanner